பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 12 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் ஏழு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட் தொடர்பாக மாநில நிதியமைச்சர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

3. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி மீண்டும் காங்கிரஸுக்கு ஒதுக்கப்படுமா என்பது குறித்து அக்கட்சியுடன் ஆலோசனை நடத்திய பின்னர் முடிவெடுக்கப்படும் என்று திமுக கூறியுள்ளது.

4. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக-வும், பிஜேபி-யும் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளன.

5. ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Payal 2 தங்கம் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக ஆக்கப்பூர்வமாக நடைபெறவில்லை என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டபின்னர் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவை 54 சதவீதம் அளவிற்கும், மாநிலங்களவை 40 சதவீத அளவிற்கு மட்டுமே செயல்பட்டதாக குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தொடரை பொறுத்தவரை மக்களவையில் நான்கு மசோதாக்களும், மாநிலங்களவையில் மூன்று மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

மக்களவையில் 15 மணிநேரத்திற்கும் கூடுதலாக விவாதம் நடைபெற்றதாகவும், இதில் 62 பேர் பங்கேற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலங்களவையை பொறுத்தவரை 17 மணிநேரம் அளவிற்கு விவாதம் நடைபெற்றதாகவும், இதில் 80 பேர் பங்கேற்றதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட் தொடர்பாக மாநில நிதியமைச்சர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் நடைபெற்றுவரும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களின் நிதியமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

மத்திய பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமரின் வங்கிக்கணக்கு திட்டத்தின்கீழ் 54 கோடிக்கும் மேற்பட்ட வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு Harsh Malhotra கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எவ்வித ரொக்க கையிருப்பு நிபந்தனையும் இன்றி இந்த கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில், 55 சதவீத வங்கிக்கணக்குகள் மகளிர் பெயரில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ் 37 கோடிக்கும் மேற்பட்ட RuPay அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசின் நிதியுதவிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி, பயனாளிகளிடம் நேரடியாக சென்றடைவதை இந்த திட்டம் உறுதி செய்துள்ளதாகவும் திரு Harsh Malhotra தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி மீண்டும் காங்கிரஸுக்கு ஒதுக்கப்படுமா என்பது குறித்து அக்கட்சியுடன் ஆலோசனை நடத்திய பின்னர் முடிவெடுக்கப்படும் என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தொகுதி இடைத்தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறை ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் திரு மு.க.ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், திருநெல்வேலியில் நீதிமன்ற வாயிலில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தை காவல்துறையினர் தடுக்காமல், வேடிக்கை பார்த்ததாக வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டுவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற வாயில்களில் அச்சமின்றி குற்றச்செயல்கள் நடைபெறுவது சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

சட்டம் - ஒழுங்கை முறையாக பராமரிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

இதற்கிடையே, திருநெல்வேலி கொலை சம்பவத்தில் காவல்துறை துரிதமாக செயல்பட்டு இரண்டு மணிநேரத்தில் நான்கு பேரை கைது செய்துள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காவல்துறையினர் துரிதமாக செயல்பட்ட போதிலும், எதிர்க்கட்சித்தலைவர் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று வழக்கம்போல் கருத்து தெரிவித்துள்ளதாகவும் குறை கூறியுள்ளார்.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு வெளியே இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக, நீதிபதி திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு குமரப்பன் அமர்வு தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு சட்டம் ஒழுங்கை முறையாக பராமரிக்கவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலையும் குற்றம்சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், நீதிமன்ற வளாகம், அரசு அலுவலகம் என அனைத்து இடங்களிலும் பொதுமக்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு திமுக கட்சிப்பதவியும், அதிகாரத்தையும் வழங்கி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பிஜேபி நிர்வாகி விட்டல் குமார் படுகொலையில் தொடர்புடைய அனைவரையும் திமுக அரசு கைது செய்ய வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கோரியுள்ளார்.

<<<<>>>>>

சென்னை ஐ ஐ டி சார்பில், அனைவருக்கும் ஐ ஐ டி என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

பொதுமக்கள் சென்னை ஐ ஐ டி-யை பார்வையிட்டு, அது குறித்த விவரங்களை அறிந்துகொள்வதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதன் பேராசிரியர் டாக்டர் முருகையன் அமிர்தலிங்கம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - முருகையன் அமிர்தலிங்கம் - 32 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் வகையில் உதகையில் 15 நாள் சாக்லேட் திருவிழா இன்று தொடங்கியது.

இதில் ஒரு கிலோ 60 ரூபாய் தொடங்கி, 10 ஆயிரம் ரூபாய் வரை 160 வகையிலான சாக்லேட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - 49 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் மாம்பாக்கம் சிப்காட் வளாகத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா இன்று தொடங்கி வைத்தார்.

--------------

கடலூர் மாவட்டத்தில் 18 ஆயிரத்து தொள்ளாயிரத்து 87 மெட்ரிக் டன் உரங்கள் கையிருப்பில் உள்ளதாக ஆட்சியர் திரு சிபி ஆதித்யா செந்தில்குமார் கூறியுள்ளார்.

-------------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மழைநீர் சேமிப்புத் தொடர்பான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------

திருச்சி ஸ்ரீரங்கம் கோவில் சொர்கவாசல் திறப்பு தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆட்சியர் திரு பிரதீப் குமார் இன்று ஆய்வு செய்தார்.

--------------

வேலூரில் தேசிய நுகர்வோர் தின விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. இதில் பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

--------------------

தென்காசி மாவட்டம் பழைய குற்றாலத்தில் பராமரிப்புப்பணிகள் நடைபெற்றுவருவதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை ஒன்பதாவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியின் முதல் நாளில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 45 கிலோ எடைப்பிரிவில் Payal 2 தங்கப்பதக்கங்களையும், ஒரு வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.

Preetismita Bhoi வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

மும்பை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Akanksha Salunkhe அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-5, 11-4, 11-3 என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் Sze Wing Wai –ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Veer Chotrani - இலங்கையின் Ravindu Laksiri-ஐ வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

-------------

மும்பையில் நடைபெற்றவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai – Riya Bhatia இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<END>>>>>